**18.08.2026**

**CC.40/2015**
**DW1. Thiru kumaran S/o. Duraisamy**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு அவரது முதல் விசாரணையின் தொடர்ச்சி:**

1. தற்போது என்னிடம் காட்டப்படும் திருகுமரன் பெயரில் உள்ள சீட்டு அட்டை எ.ம.சா.ஆ.1 ஆக (புகார் தாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி சீட்டு அட்டை யார் யாருக்காக கொடுத்தது என்ற விவரம் இல்லையென்றும், வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் என்றும், குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவித்தார்). புகார் தாரர் வழக்கறிஞர் ஆட்சேபணை உடன் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அட்டையை சத்தியமூர்த்தி கொடுத்தார். மேற்படி சீட்டு அட்டை எதற்காக கொடுத்தார் என்றால் 3,00,000/– ரூபாய் சீட்டு கட்டி வந்ததற்காக கொடுத்தார்.

2. நானும் என்னுடைய அப்பாவும் இரண்டு சீட்டு தலா 3,00,000/– ரூபாய்க்கு சத்தியமூர்த்தி என்பவரிடம் 2013 வருடத்தில் கட்டி வந்தோம். நான் தொடர்ந்து சீட்டு கட்டவில்லை. எனது அப்பா மட்டும் தொடரந்து சீட்டு கட்டி வந்தார். எனது அப்பா 2013 வருடத்திலேயே சீட்டு எடுத்தார். எனது அப்பாவிடம் சீட்டு தொகை 3,00,000/– தருவதற்கு புகார்தாரர் கேரண்டி ஆவணம் எதாவது கையொப்பம் போட்டு கொடுத்தார் தருவதாக சொன்னார்.

3. எனது அப்பா கையொப்பமிட்ட பூர்த்தி செய்யாத ஒரு காசோலையை புகார்தாரரிடம் கொடுத்தார். எனது அப்பா சுமார் 27 மாதம் வரை சீட்டு பணம் சரியாக செலுத்தி வந்தார். அதன் பின்னர் பாக்கி சீட்டு தொகை 35,000/– பணம் கட்ட முடியவில்லை. மேற்படி சீட்டு தொகையை திரும்ப கேட்டு புகார்தாரர் எனது வீட்டில் வந்து என் அம்மாவிடம் நான் தொழில் செய்து வரும் டி– கப் தயாரிக்கும் இயந்திரத்தை தூக்கி வந்து விற்பனை செய்து விடுவதாக சொன்னதால் எனது அம்மா புகார்தாரரை திட்டினார். அந்த கோவத்தில் புகார்தாரர் காசோலையை பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்துவிட்டார். புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.